நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு.வே.தேவேந்திரன், பி.எஸ்ஸி.,(வேளா)

எண்:அ2/9988/2023 நாள்: 18.01.2024

பொருள்: நியமனம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - நியமன ஆணை வழங்கி உத்திரவிடப்பட்டது - நியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் (பிணையம்)களுக்கு - பணி வரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி5/97025/2023-2, நாள் 08.12.2023
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ2/ 9988/2023 நாள் 14.12.2024.
3. சென்னை வேளாண்மை ஆணையர் அவர்களது கடிதம் எண். அபபி5/1000/2024 நாள்: 03.01.2024.

ஆணை:

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் அடங்கிய பணிகளுக்கு நேரடித் தேர்வு 24.07.2022 அன்று நடைபெற்ற போட்டி தேர்வின மூலம், இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1ல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் மூலம், இம்மாவட்டத்தில் நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளர்களை பார்வை 3ல் காணும் சென்னை வேளாண்மை ஆணையர் அவர்களது கடிதத்தில் காணும் அறிவுரைகளின்படி இப்பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணைய வ.எண் | பெயர் / பதவி<br>தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | 117 | **A.** வெற்றிலெட்சுமி,<br>இளநிலை உதவியாளர் (பிணையம்)<br>வேளாண்மை விரிவாக்க மையம் வாய்மேடு,<br>வேதாரண்யம் வட்டாரம். | 18.12.2023<br>மு.ப | 18.12.2023<br>மு.ப |
| 2. | 142 | **R.** சுந்தரராஜு<br>இளநிலை உதவியாளர் (பிணையம்)<br>வேளாண்மை விரிவாக்க மையம், கிள்ளுக்குடி.<br>கீழ்வேளுர் வட்டாரம். | 21.12.2023<br>மு.ப | 21.12.2023<br>மு.ப |
| 3. | 143 | **B.** வெங்கடேஷ்<br>இளநிலை உதவியாளர் (பிணையம்)<br>வேளாண்மை விரிவாக்க மையம், | 20.12.2023<br>மு.ப | 20.12.2023<br>மு.ப |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேளாங்கண்ணி, கீழையூர் வட்டாரம், | | |
| 4. | 180 | K. கருப்பையன்<br>இளநிலை உதவியாளர் (வேளாண்மை)<br>வேளாண்மை விரிவாக்க மையம்,<br>திருப்பயத்தங்குடி, திருமருகல் வட்டாரம் | 21.12.2023<br>முதல் | 21.12.2023<br>முதல் |
| 5. | 181 | S. பாலகிருஷ்ணன்<br>இளநிலை உதவியாளர் (வேளாண்மை)<br>வேளாண்மை விரிவாக்க மையம், பனங்குடி,<br>தலைஞாயிறு வட்டாரம். | 20.12.2023<br>முதல் | 20.12.2023<br>முதல் |

இவ்வுத்தரவு, சென்னை மற்றும் மதுரை உயர்நீதி மன்ற கிளைகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தொகுதி IVல் அடங்கிய பணிகளுக்கு பணி நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது எனவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்கண்டவாறு இப்பணியாளர்கள் பணி வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- வே.தேவேந்திரன்,
வேளாண்மை இணை இயக்குநர்(பொ),
நாகப்பட்டினம்.

பெறுநர்:
மேற்படி பணியாளர்கள், தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர்கள் வழியாக..

வழி மற்றும் நகல்:- வேளாண்மை உதவி இயக்குநர் திருமருகல், கீழையூர், கீழ்வேளூர், வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு.
நகல்:- வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
நகல்:- 'அ2' இருப்பு கோப்பிற்கு'

// உத்தரவின்படி //

கண்காணிப்பாளர்